செய்தி வெளியீடு எண்:36 நாள் : 13.01.2011

## <u>வணிகவரித் துறை - அதிக வரி செலுத்துவோர் பிரிவு அலுவலக திறப்பு விழா</u>

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.நா.மீ..உபயதுல்லா அவர்கள் சென்னையில் இன்று (13–01–2011) அதிக வரி செலுத்துவோர் பிரிவு செயல்படுத்தப்படும் புதிய அலுவலகத்தையும், கணினி மூலம் வரி செலுத்துவோருக்கு கூடுதல் வசதியினையும் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் தமிழக அரசின் 2010 –ம் ஆண்டு வணிக வரித்துறைக்கான மானியக் கோரிக்கையினை பேரவையில் தாக்கல் செய்த போது, வணிக வரித்துறையின் மொத்த வருவாயில் 60 விழுக்காடு வரியினை பங்களிப்பாக வழங்கும் வணிகர்களுக்கு உயர்தர சேவை வழங்கும் பொருட்டு தனியாக அதிக வரி செலுத்துவோர் பிரிவு ஒன்று தொடங்கப்படும் என அறிவித்தார். தமிழக அரசும் அதற்கான ஆணையினை **பிறப்பித்து,** இணை ஆணையர் (வணிக வரி) தலைமையில் “ அதிக வரி செலுத்தும் பிரிவு ” செயல்பட்டு வருகிறது.

ஏறத்தாழ 170 வணிகர்கள் இப்பிரிவின் கீழ் வருவதாக கண்டறியப்பட்டு, அவர்களுக்கு சிறப்பான சேவை வழங்க ஏதுவாக இப்பிரிவு “ துகார் டவர்ஸ்” , 5ம் தளம் , எண் 34, (பழைய எண்.123) மார்ஷல் ரோடு, எழும்பூர், சென்னை–600 008 என்ற முகவரியில் தனி அலுவலகமாக செயல்படும்.

இது தவிர வணிகர்கள், வணிக வரித்துறையின் இணையதளம் மூலம் வணிகவரி செலுத்தும் முறை கடந்த அக்டோபர் மாதம் 2009–ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரப்பெறுகின்றது. இவ்வகையான வசதி மூலம் பிரதி மாதம் சுமார் ரூபாய் 1400 கோடி வரித் தொகை வசூலாகிறது. மேலும், இணையதளம் மூலம் வணிகவரி செலுத்தும் முறை இதுவரை பாரத மாநில வங்கி மூலமாக மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. தற்பொழுது, இந்த வசதி இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பாங்க் ஆப் பரோடா ஆகிய வங்கிகள் மூலமாகவும், விரிவாக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில் திரு. முகமது நசீமுத்தின், இ.ஆ.ப., செயலர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை, திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., வணிகவரி ஆணையர், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், வங்கி அதிகாரிகள் மற்றும் அதிக வரி செலுத்தும் வணிகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்.

---

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.